

# நிகழ்வுகள்

BETHSHAN
SPECIAL SCHOOL

2025
ஆண்டு அறிக்கை

## மாவட்ட மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள்



மதுரை மாவட்ட அளவில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான எறிபந்து விளையாட்டுப் போட்டியில் நம் பள்ளி மாணவர்கள் வெள்ளிப் பதக்கமும், மாணவிகள் வெண்கலப் பதக்கமும் வென்றார்கள்.




தேசிய அளவில் நடைபெற்ற சிறப்பு ஒலிம்பிக்கில் சைக்கிள் பந்தயம் மற்றும் போச்சி போட்டியில் நமது பள்ளி மாணவி ஹர்ஷினி தங்கப் பதக்கம் வென்றார்.

## சுதந்திர தினவிழா



பள்ளியில் நடைபெற்ற நாட்டின் 79 - வது சுதந்திர தினவிழாவில் சிறப்பு விருந்தினராக **Rtn.P.குமரப்பன்** அவர்கள் கலந்து கொண்டு தேசிய கொடி ஏற்றி சிறப்புரை வழங்கினார்கள்.

## பல் மருத்துவ முகாம்




மதுரை ஜாஸ் பல் மருத்துவ மையத்தின் சார்பில் பல் மருத்துவர் **ஜோதி பிரியா** மற்றும் அவரது குழுவினர்கள் நமது பள்ளி மாணவர்களுக்கு பல் மருத்துவ பரிசோதனையை மேற்கொண்டார்கள்.

## விழிப்புணர்வு மற்றும் ஒருங்கிணைப்பு



மதுரை லேடி டோக் மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு அறிவுசார் குறை பற்றியதான விழிப்புணர்வு மற்றும் ஒருங்கிணைப்பு வழங்கியபோது.

## தொழிற்சாலை பார்வையிடல்



நத்தம் குறிஞ்சி அக்ரோ நிறுவனத்தில் மாம்பழக் கூழ் தயாரிக்கும் முறையை மாணவர்கள் நேரில் பார்வையிட்ட போது.

## பெற்றோர் ஆலோசனைக் கூட்டம்

பல் பராமரிப்பு – விழிப்புணர்வு



சிறப்பு விருந்தினர்
**Dr. ஜோதி பிரியா** அவர்கள் – பல் மருத்துவர்
ஜோஸ் பல் மருத்துவ மையம்

பெற்றோர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் & சிறந்த உணவு பழக்க முறை




சிறப்பு விருந்தினர்கள்
**Dr.T. S. தினேஷ் குமார்** & **Dr.A.G. லலிதா**
டி–கேர் மருத்துவமனை






## கை கொடுக்கும் கை திட்டம்


மதுரை மீனாட்சி ரோட்டரி சங்கம் நவம்பர் 14 ஆம் தேதி குழந்தைகள் தினத்தன்று நமது பள்ளி மாணவர்களின் ஆரோக்கியம் மற்றும் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் தேனீ வளர்ப்பு **“கை கொடுக்கும் கை”** எனும் திட்டத்தை சிறப்பு விருந்தினர் **Rtn. P. குமரப்பன்** அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரை வழங்கினார்கள். சிறப்பு பேச்சாளராக திரு. **DR. பீம்சிங்** அவர்கள் தேனீக்கள் வளர்ப்பு முறை பற்றி விளக்கினார். உடன் ரோட்டரி சங்கத் தலைவர், நிர்வாகிகள், உறுப்பினர்கள், பெற்றோர்கள் மற்றும் பள்ளி நிர்வாகிகளும் கலந்து கொண்டார்கள். மாணவர்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

## தேசிய கருத்தரங்கு






கொடைக்கானல், அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகமும், நமது பள்ளியும் இணைந்து தேசிய அளவிலான இரண்டு நாள் கருத்தரங்கினை அக்டோபர் 24 & 25 ஆம் தேதிகளில் நடத்தியது. இதில் சுமார் 200 சிறப்பு கல்வி ஆசிரியர்கள் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சியை ஜெயராஜ் அன்னபாக்கியம் செவிலியர் கல்லூரியின் முதல்வர் **Dr. C. ஜோதி சோபியா** அவர்கள் வாழ்த்துரை வழங்கி துவக்கி வைத்தார்கள்.




இவ்வருடம் நடைபெற்ற 22 - வது உலக மனநல நாள் நிகழ்ச்சியானது நமது பள்ளியும், ஜே.ஸி.ரெஸிடென்ஸி ஹோட்டல், மதுரை மீனாட்சி ரோட்டரி சங்கம், மதுரை ரவுன்டு டேபிள் - 14 மற்றும் மதுரை லேடிஸ் சர்கிள் 8 ஆகிய சங்கங்கள் இணைந்து மதுரை மாவட்டத்திலுள்ள 20 சிறப்பு பள்ளிகளில் பணியாற்றும் சிறப்பு கல்வியாசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசுகளும் வழங்கி கௌரவித்தது. இவ்வருடம் **“MEANINGFUL PARTICIPATION”** என்கிற கருப்பொருளை சிறப்பு விருந்தினர்கள் வெளியிட்டார்கள்.









## உலக மாற்றுத்திறனாளிகள் நாள்

உலக மாற்றுத்திறனாளிகள் தினமான டிசம்பர் 3 ஆம் தேதியன்று மதுரை, லேடி டோக் மகளிர் கலைக் கல்லூரி மாணவிகளுக்கு அறிவுசார் குறை பற்றி விழிப்புணர்வு வழங்கப்பட்டது. அதை தொடர்ந்து நமது பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.




## கிறிஸ்மஸ் விழா



நமது பள்ளியில் நடைபெற்ற கிறிஸ்மஸ் விழாவில் சி.எஸ்.ஐ. ஜெயராஜ் அன்னபாக்கியம் செவிலியர் கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு மாணவர்களை உற்சாகப்படுத்தினார்கள்.




# பெத்சான் சிறப்பு பள்ளி

( அறிவுசார் குறைந்த மாற்றுத்திறனாளிகளுக்கானது )

தமிழக அரசின் அங்கீகாரம் பெற்றது

எண் : 828, சிக்கந்தர் சாவடி, மதுரை - 625 018.

Contact No : 98944 76662 ; 944881 66770

E-mail : bethshanspecialschool96@gmail.com | Web : www.bethshanschool.com